## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE NO.I,MANNARGUDI**

**ST.C.No.308/2021 P.W. 1 நடராஜன் த/பெ. வேணுகோபால்**

நாள் 25.06.2025

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிக்கு எந்த தேதியில் எவ்வளவு தொகை, எங்கு வைத்து கொடுத்தேன் என்று எனது வழக்கறிஞர் அறிவிப்பில் EXP.25 ல் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. மேற்படி கடன் எந்த காலக்கட்டத்திற்கான கடன் என்றால் 2010 முதல் 2017 வரையுள்ள கடன். 2010 முதல் 2017 வரையுள்ள கடன் கொடுக்கும்போது எந்தவிதமான ஆதார ஆவணங்களும் எழுதி வாங்கவில்லை என்றால் சரிதான். மொத்தமாக எழுதி வாங்கியுள்ளேன் கடன் என்று சொன்னால் ஒரு வட்டி உண்டு என்றால் சரிதான். மேற்படி கடன் வட்டிக்கு கொடுக்கப்பட்டதா என்றால் நான் வட்டிக்கு கொடுக்கவில்லை. கைமாற்று கடனாக தான் கொடுத்தேன். EXP.25 கைமாற்று கடனாக கொடுத்தேன் என்று எங்காவது குறிப்பிட்டுள்ளதா என்றால் சொல்லவில்லை. என்னிடம் நாடி வருபவர்களுக்கு வட்டியில்லாமல் கடன் கொடுப்பேன் என்றால் இல்லை. 10.02.2020 ம் தேதியிட்ட காசோலை ரூ.1,00,000/- சிட்டி யூனியன் வங்கி, தஞ்சாவூர் காசோலை தேதியில் இருந்து 40 நாட்கள் கழித்து வசூலுக்கு செலுத்தியதன் காரணம் என்ன என்றால் காசோலைக்கான காலக்கெடுவிற்குள் தாக்கல் செய்யலாம். 20.02.2020 ம் தேதியிட்ட 00043 ரூ.2,00,000/- சிட்டி யூனியன் வங்கி, தஞ்சாவூர் காசோலை தேதியில் இருந்து 31 நாட்கள் கழித்து வசூலுக்கு செலுத்தியதன் காரணம் என்ன என்றால் எதிரி கேட்டுக்கொண்டதற்கிணங்க காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நான் கொடுத்த புகார் மனு, வழக்கறிஞர் அறிவிப்பு , நிரூபண ஆணையுறுதி வாக்குமூலம் ஆகியவற்றில் எதிரி கேட்டுக்கொண்டதற்கிணங்க காலதாமதாக தாக்கல் செய்துள்ளேன் என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் இந்த Question அப்போது arise ஆக வில்லை. நான் தாக்கல் செய்துள்ள 12 காசோலைகளில் சிட்டி யூனியன் வங்கி, தஞ்சாவூர் காசோலையான 0061 ஐ ரூ.1,20,000/- காசோலை தேதியில் இருந்து 63 நாட்கள் கழித்தும், 05.08.2020 ம்தேதியிட்ட HDFC Bank, தஞ்சாவூர், காசோலை 115926 ரூ.1,00,000/- ஆனது காசோலை தேதியில் இருந்து 48 நாட்கள் கழித்தும், 10.01.2020 ம்தேதியிட்ட HDFC Bank, தஞ்சாவூர், காசோலை 000585 ரூ.2,00,000/- ஆனது காசோலை தேதியில் இருந்து 74 நாட்கள் கழித்தும், 20.01.2020 ம்தேதியிட்ட HDFC Bank, தஞ்சாவூர், காசோலை 00054 ரூ.1,00,000/- ஆனது காசோலை தேதியில் இருந்து 56 நாட்கள் கழித்தும், 30.01.2020 ம்தேதியிட்ட HDFC Bank, தஞ்சாவூர், காசோலை 000826 ரூ.1,00,000/- ஆனது காசோலை தேதியில் இருந்து 60 நாட்கள் கழித்தும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் வழக்கறிஞர் அறிவிப்பை திருப்பப்பட்ட கவரில் EXP26 எப்போது அனுப்பினேன் என்றால் 04.04.2020 ம் தேதி அனுப்பினேன் என்றால் சரிதான். அந்த கவரில் அஞ்சல் துறையினர் Left without instruction என்று 09.04.2020 ல் குறிப்பெழுதி திருப்பியிருக்கிறார்கள் என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பு சட்டபடியான அறிவிப்பு இல்லை என்றால் சரியல்ல. ஆகையால் வழக்கிற்கு வழக்கு மூலமே எழ வில்லை

என்றால் சரியல்ல. 12 காசோலைகளை ஒரு வழக்கில் தாக்கல் செய்து ஒரே வழக்காக நடத்தியது சட்டப்படி தவறானது என்றால் சரியல்ல. நான் லேவா தேவி தொழில் செய்வதற்கு அரசிடம் அனுமதி வாங்கியுள்ளேனா என்றால் நான் அந்த தொழிலை செய்யவில்லை. நான் இந்நீதிமன்றத்திற்கு காசோலை வழக்குகளில் எத்தனை வழக்குகளில் including சமரச வழக்குகளில் வாதியாக வந்துள்ளேன் என்றால் சமரச வழக்குகளை கணக்கில் எடுத்துக்கொள்ள கூடாது. எனக்கு தெரிந்து 15 வருடங்களில் நான்கு வழக்குகள். தற்போது விசாரணையில் உள்ள வழக்குகளில் இந்த கேஸ் மற்றும் பட்டுக்கோட்டை பன்னீர்செல்வம் மீது மட்டுமே உள்ளது. இந்த எதிரி மீது இந்நீதிமன்றத்தில் இரண்டு வழக்கு உள்ளது. ஒரு நபருக்கு ரூ.50,000/-க்கு மேல் பணம் கொடுத்தால் வங்கி பரிவர்த்தனை மூலமாக தான் செய்ய வேண்டும் என்றால் கைமாற்றுக்கடனுக்கு கிடையாது. எதிரிக்கு கொடுத்ததாக சொல்லப்படும் கடன்களை எல்லாம் நான் வங்கி மூலமாக பரிவர்த்தனை செய்யவில்லை என்றால் சரிதான். மன்னார்குடியில் பாரத ஸ்டேட் வங்கி, கனரா வங்கி, ஐசிஐசிஐ ஆகிய மூன்று வங்கிகளில் கணக்கு உள்ளது. மேற்படி மூன்று வங்கி கணக்குகளை 2010 முதல் 2017 வரையிலான கணக்கு பரிவர்த்தனைகளை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். தேவையென்றால் நீங்களே வாங்கி கொள்ளுங்கள். மேற்படி வங்கி கணக்குகளில் மேற்படி காலகட்டத்தில் இந்த எதிரியானவர் ரூ.60 லட்சத்திற்கு மேல் வங்கியில் செலுத்தியுள்ளார் என்றால் சரியல்ல. அதை நான் மறுக்கிறேன். மேற்படி மூன்ற வங்கி கணக்கு எண்களை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியும்.

**(எதிரி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)**

Sd/--J. Tamizhmurugan,

Judicial Magistrate No.I,

Mannargudi.